# முதலெழுத்து விளக்க நெறிகளில் மரபிலக்கணங்கள்

**த. சத்தியராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா
9600370671
neyakkoo27@gmail.com
http://meyveendu.blogspot.in/

## முன்னுரை


தமிழ் மரபிலக்கணங்களை ஆய்வறிஞர்கள் அகத்தியம், தொல்காப்பியம், வீரசோழியம், பிரயோகவிவேகம் என நான்கு மரபுகளாக இனங்காண்கின்றனர். இவ்வகைப் பிரிப்புமுறைகள் இலக்கண உருவாக்க நோக்கம், புறக்கட்டமைப்பு, முன்னோர் நூலைப் பின்பற்றும் பொதுமரபு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன எனலாம். தமிழ் மொழிக்குரிய முதலெழுத்து விளக்க நெறிகளில் மரபிலக்கணிகளின் நிலைப்பாடுகள் குறித்தும், அதன் மரபாக்கம் குறித்தும் விளக்க முனைகின்றது இக்கட்டுரை.

## தமிழ் நெடுங்கணக்கு

தமிழ் மொழிக்குரிய நெடுங்கணக்குகள் மொத்தம் இருநூற்றி நாற்பத்தியேழு என ஆரம்பக்கல்வியில் புகட்டப்படுகின்றது; புகட்டப்பெற்று வருகின்றது. இந்நெடுங்கணக்குகளை மரபிலக்கணிகள் முதல், சார்பு எனப் பிரித்துப் பார்க்கின்றனர். இவற்றுள் முதலெழுத்து விளக்கமுறைகளில் மரபிலக்கணிகளிடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. அஃதியாங்கெனின் தொல்காப்பியர் சார்பெழுத்துகள் (ஆய்தம், உயிர்மெய்) எனக் கருதியதை, முதல் எழுத்துகளுடன் இணைத்துப்பார்ப்பதேயாம்.

## முதலெழுத்துப் பாகுபாட்டில் மரபிலக்கணங்கள்

முதலெழுத்து என்பது உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆகிய முப்பதெனக் குறிப்பிடுகின்றது தொல்காப்பியம். இந்நூல் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும், சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே எனக் கூறுவதிலிருந்து புரிந்து கொள்ளலாம். அதன் பின்பு எழுதப்பட்ட இலக்கணங்கள் ஆய்தத்தையும் உயிர்மெய் இருநூற்றிப் பதினாறையும் இடம்பெறச் செய்கின்றன. அதாவது, தொல்காப்பியத்தைப் பின்பற்றுவன முதலெழுத்து என்றும், சமசுகிருத மரபையும் ஒப்ப வைத்துப் பார்ப்பன பொதுமையாய்த் தமிழ் எழுத்துகள் என்றும் குறிப்பிடுவதாகும்.




**முதலெழுத்து முப்பது**

மேற்காட்டிய வரைபடத்தின் அடிப்படையில் நோக்கினால் தொல்காப்பியத்தைச் சார்ந்து ஐந்து இல்சக்கணங்களும், வீரசோழியம், நேமிநாதம், அறுவகையிலக்கணம் ஆகியன தனித்தனியாகவும் தமிழுக்குரிய எழுத்துக்களைச் சுட்டுவதைக் காணலாம். அவற்றுள் தொல்காப்பியம் சார்ந்த இலக்கணங்கள் முதல் எழுத்துக்கள் முப்பதே என்ற நிலைப்பாட்டுடன் திகழ்கின்றன. அதனைப் பின்வரும் விதிகள் புலப்படுத்தும்.

எழுத்து எனப்படுப
அகரம் முதல்
னகர இறுவாய் முப்பஃது என்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே – தொல். எழுத்து. 1

உயிரும் உடம்புமென முதல்இரு வகைத்தே அவற்று
உயிர்ஈ ராறுமெய் மூவாறு என்ப – இ.வி.4

முதல் எழுத்து உயிர் ஈராறுடன் மூவாறே – தொ.வி.5

அதுமுதல் சார்பென வாமிரு பாலன – மு.வீ.4

உயிருட லெனமுத லோரிரு வகைய – மு.வீ.5

அகர முதலுயி ராறிண்டாகும் – மு.வீ.6

ககர முதன் மூவாறுங் காத்திர மாகும் – மு.வீ.12

அகராதி யீராறும் உயிர், ககராதிகள் மூவாறும் உடல்இம்
முப்பானும் முதலெழுத்தாம் – சுவாமி.15

**முதலெழுத்து முப்பத்தொன்று**

உயிர், மெய் ஆகியவற்றுடன் ஆய்த எழுத்தையும் சேர்த்து முதல் எழுத்து முப்பத்தொன்று எனைக்கூறும் போக்கு நேமிநாதத்தில் காணலாகின்றது. அதனை,

ஆவி கரமுதல் ஆறிரண்டாம் ஆய்தமிடை
மேவுங் ககரமுதன் மெய்களாம் – மூவாறும்
கண்ணு முறைமையாற் காட்டியமுப் பத்தொன்று
நண்ணுமுதல் வைப்பாகு நான்கு – நேமி.1

எனும் விதி புலப்படுத்தும். இதன் மூலம் நேமிநாதம் தொல்காப்பிய மரபையும், வீரசோழிய மரபையும் இணைத்துப் பார்க்கும் முயற்சியை மேற்கொள்கின்றது எனலாம்.

**பொதுமை: தமிழ் எழுத்துகள் முப்பத்தொன்று**

வீரசோழியம் தமிழ் மரபையும் சமசுகிருத மரபையும் ஒப்ப வைத்துப் பார்ப்பது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆதலால் தமிழ் மொழிக்குரிய எழுத்துக்கள் முப்பத்தொன்று என வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பாகத் தருகின்றது. அதனை,

> அறிந்த எழுத்து அம்முன் பன்னிரண்டு ஆவிகள் ஆனகம்முன்
> பிறந்த பதினெட்டு மெய்நாடு ஆய்தம் பெயர்த்து – வீ. சோ. சந். 1

எனவரும் விதியின் மூலம் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு வீரசோழியம் பொதுமையாகக் கூறுவதற்கான காரணம் ஒன்று உண்டு. அஃதியாங்கெனின், சமசுகிருத மொழியாளர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பொருட்டுத் தமிழ் எழுத்துகளை அறிமுகப்படுத்த வேண்டிய கடமை இருந்துள்ளமையேயாம்.

**பொதுமை: தமிழ் எழுத்துக்கள் இருநூற்றி நாற்பத்தியேழு**

இதுவரை விளக்கப்பட்ட இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் தவிர, பிற இளம்பூரணரின் (கி.பி.11) சமகால, சமகாலத்துக்குப் பிந்திய இலக்கண நூல்களே. இருப்பினும் அவ்வுரையாசிரியர்களின் கருத்தை அவ்விலக்கண அறிஞர்கள் ஏற்கவில்லை எனலாம். ஏனெனின் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய முதல்வர் இளம்பூரணர். இவர் தம் உரையில் முதல் எழுத்துக்குரிய தொகை வகை விரியை அடிப்படையை விளக்குகையில் இருநூற்றி ஐம்பத்தாறு எழுத்துக்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றார். அதனை,

> … எழுத்தென்பது தொகையின் தொகை, முப்பதென்பது அதன் வகை; முப்பத்து மூன்றென்பது அதன் விரி. முப்பதென்பது வகையுள் தொகை. முப்பத்துமூன்றென்பது அதன் வகை. அளபெடை தலைப்பெய்து நாற்பதென்பது அதன் விரி. முப்பத்து மூன்றென்பது விரியின் தொகை. நாற்பதென்பது அதன் வகை. உயிர்மெய் தலைப்பெய்து இருநூற்றைம்பத்தாறென்பது அதன் விரி (2003:74)

எனவரும் கருத்து குறித்து நிற்கின்றது. இக்கருத்தை வலியுறுத்தியே நச்சினார்க்கினியரின் (கி.பி.14) கருத்தும் (2003:70) அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அவ்வுரையாசிரியர் காலத்திற்குப் பின்பு வந்த

இலக்கணிகளில் தண்டபானி சுவாமிகளே உயிர்மெய்யையும், ஆய்தத்தையும் தமிழ் நெடுங்கணக்கில் இணைத்துப் பார்த்துள்ளார். அதனை,

ஆவி ஈராறு ஆய்தம் ஒன்று உடல்
அறுமூன்று உயிர்மெய் யாம் இவை இருநூற்று
ஒருபதிற் றாறுஅல குடைமை நால்வகை
கூட்டும் குறிப்பும் குணிக்கரும் விதமே — அறு.இ.4

எனும் விதிப் புலப்படுத்தும்.

இதுகாறும் விளக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் நோக்கினால் ஒவ்வொரு இலக்கணக் கூறுகளையும் தனித்தனியே மரபிலக்கணங்களுக்குள்ளே ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் போக்குகள் மாறியமைவதைக் காணமுடியும் என்பதையும், பழைய உரையாசிரியர்கள் கருத்துக்களும் பின்னாளில் விதியாக்கம் பெறுகின்றமையையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

**துணைநின்றவை**


1. அறவாணன் க.ப.(பதி.), 1975, **தொல்காப்பிய ஒப்பியல்**, சைன இளைஞர் மன்றம், சென்னை.
2. இளவழகன் கோ.(பதி.), 2003, **தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம், நச்சினார்க்கினி**யம், தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
3. கோவிந்தராச முதலியார் கா.ர.(பதி.), 2009, **நேமிநாதம்**, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. சண்முகம் செ.வை.(பதி.), 1975, **சுவாமிநாதம்**, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.
5. சுப்பிரமணியம் ச.வே., 2009, **தமிழ் இலக்கண நூல்கள்**, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.